சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா.01 திரு. செங்குட்டவன் த /பெ திரு. சின்னராஜ் , வயது . 64

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .–

1. 08.01.2023 அன்று எதிரி என்னை அணுகி ரூ.6,00,000/– கடன் கேட்டார். நான் ரயில்வே துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நான் கூறுவது போல் எதிரி என்னிடம் பணம் ஏதும் பெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 12.11.2020 அன்று எதிரி என்னிடமிருந்து ரூபாய் 2,00,000/– கடன் பெற்றார் என்றாலும் அந்தப் பணத்தில் வட்டி போக ரூபாய் 1,84,000/– மட்டுமே எதிரிக்கு கொடுத்தேன் என்றாலும் அந்த பணத்தையும் அவர் முழுவதுமாக செலுத்தி விட்டார் என்றாலும் சரியல்ல. என் மகன் பெயர் எஸ்.விமல் குமார் என்றால் சரிதான். என் மகன் எஸ்.விமல் குமார் என்பவரின் வங்கிக் கணக்கில் இருந்து தான் ரூபாய். 1,84,000/– எதிரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது என் மகனுக்கும் எதிரிக்கும் உள்ள கணக்கு வழக்காகும் அதற்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை. 05.12.2020 அன்று நேரடியாக எதிரி என்னை அணுகி ரூபாய் பத்தாயிரம் திரும்ப செலுத்தினார் என்றால் சரியல்ல. 03.01.2021, 05.02.2021, 06.03.2021 பிரதி மாதம் ரூ.10,000 எதிரி தன் வங்கிக் கணக்கில் இருந்து என் மகன் வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பி உள்ளார் என்றால் அந்த பரிவர்த்தனையானது என் மகனுக்கும் எதிரிக்கும் உள்ள தனிப்பட்ட பரிவர்த்தனையாகும் இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

2. மேலும், 2021 வருடம் ஏப்ரல், மே, ஜீன் ஆகிய தேதிகளில் மொத்தம் ரூ.70,000/– எதிரி தன் வங்கிக் கணக்கில் இருந்து என் மகன் வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பி உள்ளார் என்றால் அந்த பரிவர்த்தனையானது என் மகனுக்கும் எதிரிக்கும் உள்ள தனிப்பட்ட பரிவர்த்தனையாகும் இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. 10.07.2021, 05.08.2021, 06.09.2021, 10.10.2021, 30.11.2021 ஆகிய தேதிகளில் பிரதி மாதம் ரூ.10,000/– வீதம் மொத்தம் 50,000/– எதிரி தன் வங்கிக் கணக்கில் இருந்து என் மகன் வங்கிக் கணக்கிற்கு பணம்

அனுப்பி உள்ளார் என்றால் அந்த பரிவர்த்தனையானது என் மகனுக்கும் எதிரிக்கும் உள்ள தனிப்பட்ட பரிவர்த்தனையாகும் இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஆக மொத்தம் வங்கி கணக்கு மூலமாகவே எதிரி என் மகன் எஸ். விமல்குமார் வங்கிகணக்கிற்கு ரூ. 1,20,000/- அனுப்பிஉள்ளார் என்றால் அது அவருக்குள் இருக்கும் பரிவர்தனை ஆகும்.

3. எனக்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை. என் மனைவி பெயர் சுதா. 23.12.2021 அன்று என் மனைவி வங்கி கணக்கிற்கு எதிரி ரூ.15,000/- செலுத்தி உள்ளார் என்றால் என் மனைவிக்கும் எதிரிக்கும் உள்ள தனிப்பட்ட பரிவர்தனை ஆகும். அதற்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022 வரை பிரதி மாதம் ரூ.10,000 வீதம் மொத்தம் ரூ.1,20,000/- எதிரி என்னை நேரில் அணுகி செலுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. டிசம்பர் 2022 வரை எதிரி எனக்கு ரூ.2,55,000/- திருப்ப செலுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. நான் எந்த பணமும் வாங்கவில்லை. மேலும் 2023 வருடம் மே மாதம் நானும் என் மனைவியும் எதிரி வீட்டிற்கு நேராக சென்று ரூ. 50,000/- ரொக்கமாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் தான் எதிரியிடமிருந்து கையொப்பம் செய்யப்பட்ட ஐந்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலைகளையும் ரூபாய் 100 முத்திரைதாளில் எழுதப்படாமல் கையொப்பம் மட்டும் பெற்று சென்று உள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் கந்து வட்டி செலுத்த வேண்டும் என்று கூறினேன் என்றால் சரியல்ல. செலுத்திய பணம் போக மேலும் ரூபாய் 50 ஆயிரம் செலுத்தினால் ஆவணங்களை திருப்பிக் கொடுப்பதாக கூறிவிட்டு தற்போது பொய்யாக இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வட்டி தொழில் செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்றுள்ளேன் என்றால் நான் வட்டித் தொழிலை செய்யவில்லை. நான் எதிரிக்கு ரூபாய் ஆறு லட்சம் கடன் கொடுத்ததை எனது வருமான வரி கணக்கில் காண்பித்து உள்ளேன் என்றால் இல்லை.

4. எதிரி வாங்கிய கடனை முழுவதுமாக திரும்ப செலுத்தி விட்டார் என்றாலும் அவர் ஏற்கனவே ஈடாக கொடுத்த காசோலையை நான் பூர்த்தி செய்து நானும் என் மனைவியும் மகனும் சேர்ந்து கூட்டு சதி செய்து பொய்யாக வழக்கு தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி தன் வங்கிக் கணக்கில் இருந்து என் மகனுக்கும் என் மனைவிக்கும் பணம் அனுப்பியதற்கு ஆதாரமாக வங்கி கணக்கு பட்டியை இவ்வுலகில் தாக்கல் செய்ய தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. 633197, 633198, 633199, 633200 ஆகிய காசோலைகளை நானே வைத்துள்ளேன் என்றாலும், எதிரி பல முறை கேட்டும் கொடுக்க மறுத்துவிட்டேன்

என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலை மட்டுமே எதிரி எனக்கு கொடுத்துள்ளார். 663196 முதல் வரிசையாக எதிரி எனக்கு 5 காசோலைகள் கொடுத்துள்ளார். அந்த காசோலைகளை பணத்தை திரும்ப செலுத்திவிட்டு வாங்கிகொள்வதாக எதிரி என்னிடம் கூறினார். எதிரி பணத்தை செலுத்தாததால் 663196 என்ற காசோலையை மட்டும் என் வங்கி கணக்கில் தாக்கல் செய்தேன். மற்ற காசோலைகள் என்னிடம் உள்ளன். எதிரி கையொப்பமிட்ட பூர்த்தி செய்யப்படாத ரூ.100 முத்திரைதாள் என்னிடம் ஏதும் இல்லை. காசோலைகளை மட்டுமே எதிரி கொடுத்தார். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை ஆனது சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறமானது என்றால் சரி அல்ல. நான் எதிரிக்கு கொடுத்த பணத்தை முழுவதுமாக பெற்றுக்கொண்டு அவருக்கு வீண் தொந்தரவு கொடுக்க வேண்டி பொய்யாக இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல எதிரிக்கும் இவ்வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி அல்ல.

Sd/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.